## 29.32 பகுதிநேர விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு ஊதியம் உயர்த்தி நிர்ணயித்தல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 119 நாள் : 10.05.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி நாள்–31.08.1998
2. அரசாணை (2டி) எண்.48, ஊரக வளர்ச்சி நாள்– 09.07.1999
3. அரசாணை (2டி) எண்.149, ஊரக வளர்ச்சி நாள்– 09.07.1999
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.27094/ஈ1/99, நாள்–06.04.2000.

**ஆணை**

கிராம ஊராட்சிப் பணியாளர்களுக்கு அவ்வப்போது ஊதியம் உயர்த்தி நிர்ணயித்து வந்த போதிலும், மேலும் ஊதிய உயர்வு மற்றும் சலுகைகள் கோரிய நிலையில் அவர்கள் கூடுதல் ஊதியம் பெறும் வகையிலும், அவர்களின் செயல்பாடு மேம்படும் வகையிலும், கிராம ஊராட்சிகளின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு பணியமைப்பை சீரமைப்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி இயக்குநர் தலைமையில் சில அலுவலர்களையும் கிராம ஊராட்சி தலைவர்களையும் உறுப்பினர்களாக கொண்டு குழு ஒன்று ஏற்படுத்தி படிக்கப்பட்டவை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டது.

2.அக்குழு ஊராட்சி நிர்வாகத்தில் செய்யவேண்டிய மாற்றம் குறித்து கருத்தரங்கம் ஒன்றின் மூலம் பல்வேறு கிராம ஊராட்சித் தலைவர்களின் கருத்தை அறிந்த பின் 10 பரிந்துரைகளை கொண்ட அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. அதில் தமிழகத்திலுள்ள 12618 கிராம ஊராட்சிகளில் 36610 விசைப்பம்புகள் / மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை 26904 விசைப்பம்புகள் / மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் இயக்கி வருகின்றனர் என்று குறிப்பிட்டு கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது.

**பரிந்துரை எண். 1**

அரசாணை (2டி) எண். 148, ஊரக வளர்ச்சி (இ5) துறை நாள்–09.07.1999ன்படி ஊராட்சிகளில் பணிபுரியும் விசைப்பம்பு / மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு ரூ.350/– தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதனை ரூ.400/– ஆக உயர்த்தி வழங்கலாம். ஒவ்வொரு விசைப்பம்பு / மேல்நிலை தொட்டிக்கும் ஒரு இயக்குபவர் நியமிப்பதை தவிர்த்து ஒன்றுக்கும் மேற்பட்ட விசைப்பம்பு / மேல் நிலை தொட்டிகளை ஒருவரிடமே ஒப்படைக்கலாம். இவ்வாறு ஒப்படைக்கும்போது அடிப்படையாக பெறும் ரூ.400/– உடன் கூடுதலாக இயக்கும் ஒவ்வொரு விசைப்பம்புக்கும் ரூ.150/– வீதம் கூடுதலாக வழங்குமாறு அரசு ஆணையிடலாம் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

3. இதனை அரசு நன்கு ஆய்வு செய்தது. கொள்கையளவில் இப்பரிந்துரையை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும் கிராம ஊராட்சி விசைப்பம்பு / மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்களை பகுதி நேர பல்முறை தொழில் நுட்ப பணியாளர்களாக உருவாக்கினால் வருங்காலத்தில் ஊராட்சிகளின் செயல்பாடு மேம்பட வழிகோலும் என்று அரசு கருதுகின்றது.

4. எனவே, அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகின்றது.

அ. கிராம ஊராட்சிகள் இனிமேல் ஒவ்வொரு விசைப்பம்புக்கும் ஒரு இயக்குபவரை நியமிப்பதை தவிர்த்து ஒன்றுக்கு மேற்பட்ட விசைப்பம்பு இயக்கும் பணியை ஒருவரிடமே ஒப்படைக்கலாம்.

ஆ. கிராம ஊராட்சி பகுதிநேர விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு படிக்கப்பட்டவை 2ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் தொகுப்பூதியம் மாதம் ரூ.350/– நிர்ணயித்துள்ளதை உயர்த்தி ரூ.400/– ஆக நிர்ணயித்து வழங்க அரசு ஆணையிடுகின்றது.

இ. கூடுதலாக பராமரிக்கும் ஒவ்வொரு கூடுதல் விசைப் பம்புக்கும் மாதம் ரூ.150/– வீதம் கூடுதலாக வழங்கவும் அனுமதி அளிக்கப்படுகின்றது.

5. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.

6.அரசாணை (நிலை) எண்.101, நிதி நாள்–29.04.1998, கிராம ஊராட்சி சுகாதார பணியாளர் விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு பொருந்தும் என்று வாதிட்டு தொடுக்கப்பட்ட வழக்குகளில் கீழ்க்கண்ட வழக்குகள் திரும்ப பெற்றதாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

| சங்கத்தின் பெயர் | வழக்கு எண். |
|---|---|
| 1. வேலூர் மாவட்ட ஊராட்சி ஒன்றிய விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் சங்கம் | சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண். 15917/98 |
| 2. தருமபுரி மாவட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் சங்கம் | சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண். 16995/98 |
| 3. தருமபுரி மாவட்ட ஊராட்சி உதவியாளர் சங்கம் | சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண். 17118/98 |

எனவே இந்த வழக்குகளில் நீதிமன்ற இடைக்காலத் தடை ஆணை ஏதும் அமலில் இல்லை. கீழ்க்கண்ட வழக்குகள் இன்றும் முடிவடையாமல் உள்ளன.

| சங்கத்தின் பெயர் / வழக்கு தொடுத்தவர் | வழக்கு எண். |
|---|---|
| 1.திரு.டி.ஆர்.ராம்நாத், பொதுச் செயலாளராக உள்ள தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய விசைப்பம்பு இயக்குபவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் திருவண்ணாமலை மாவட்டம். | சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண். 16307/98, 20.10.98 அன்று இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சங்கம், செஞ்சி, |
| 2.தமிழ்நாடு ஊரக வளாச்சி துறை பணியாளர்கள் சங்கம் ( திரு.ஆர்.ரங்கராஜ்,) ஜோதிபுரம் அஞ்சல், கோயம்புத்தூர் – 1 விதிக்கப்பட்டது. | சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண். 9025/99 10.06.99 அன்று ஆறு வாாரங்களுக்கு இடைக்காலத் தடை |
| 3.தமிழ்நாடு ஊராட்சி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இயக்குபவர்கள் மற்றும் பணியாளர்கள் சங்கம். (பதிவு எண்.441/டிஆர்பி) (வேலூர் மாவட்ட செயலர் தொடுத்தது) | சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண். 14976/99 08.9.99 நாள் பிறப்பித்த சுகாதார இடைக்கால ஆணையில் 31.03.1998க்குள் முன்னர் வழங்கப்பட்ட ஊதியத்தை தொடர்ந்து மறு உத்தரவு போடப்படும் வரை அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. |

எனவே முடிவடையாமல் உள்ள வழக்குகளுக்கு பாதகமில்லாதவாறு இந்த அரசாணை வெளியிடப்படுகிறது. முடிவடையாமல் உள்ள வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அரசுக் கடிதம் எண். 43880/இ5/98, நாள்–16.07.1999 மற்றும் 23.07.1999ல் அறிவுறுத்தியபடி 31.08.1998க்கு முன்பு வழங்கப்பட்டு வந்த ஊதியத்தை மறுஉத்தரவு வெளியிடப்படும் வரை தொடர்ந்து வழங்குமாறும் ஏனையோருக்கு இந்த அரசாணை பத்தி 4ன்படியும் ஊதியம் அளிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

7. இந்த அரசாணையின் நகலை அனைத்து கிராம ஊராட்சி தலைவர்களுக்கும், உதவி இயக்குநர்களுக்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் உடனடியாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண். 1370/எப்.எஸ்./பி/2000 நாள்–03.05.2000ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்